**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.43/2015**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கோவிந்தன் | மதம் | : இந்து |
| த/பெ | : முருகன் | ஜாதி | : -- |
| வயது | : 67 | கிராமம் | : மணவூர் |
| தொழில் : | ரயில்வே ஓய்வு | வட்டம் | : திருத்தணி |

**18.08.2026**
**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

3. 29.08.2010ம் தேதியிட்டு கொடுக்கப்பட்ட ஒப்படைப்பு பட்டா தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 29.11.2015ம் தேதியிட்ட பட்டா தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 24.09.2013ம் தேதியிட்ட வீட்டு வரி ரசீது தாக்கல் செய்கிறேன். **(வீட்டு வரி ரசீது வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சொத்தின் மாதிரி வரைபடம் தாக்கல் செய்கிறேன். **(மாதிரி வரைபடம் வா.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். **(நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ 1 ஆகவும் வரைபடம் நீ.ம.சா.ஆ 2 ஆகவும் புகைப்படங்கள் (13 எண்ணம்) மற்றும் குறுந்தகடு நீ.ம.சா.ஆ 3 வரிசை ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)** பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)